# கருஞ்சட்டைத் தமிழர்

மாதம் இருமுறை

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

● மலர்:6 இதழ்: 23 ● திருவள்ளுவர் ஆண்டு 2047 ● பிப்ரவரி 1-15, 2017 ● விலை:ரூ.5 ● Volume:6 Issue:23 ● February 1-15, 2017 ● Price:Rs.5


## மாணவர்களின்

# தைப்புரட்சி



**சுப.வீரபாண்டியன்**

தமிழ்நாட்டில் மொழி உணர்வு வடியவும் இல்லை, மொழிப்போராட்டம் இன்னும் முடியவும் இல்லை என்று தோன்றுகிறது. 52 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டில், மீண்டும் ஒரு மாணவர் எழுச்சி நடந்து முடிந்திருக்கிறது. அன்றைய போராட்டம் மொழித் தளத்தில் நடைபெற்றது. இன்றைய போராட்டமோ, பண்பாட்டுத் தளத்தில் நடைபெற்றுள்ளது. அன்றைய தினம் போராட்டத்தின் முதல் நாளிலேயே, அரசின் ஒடுக்கு முறை தொடங்கிவிட்டது. இன்றைய தினம் போராட்டத்தின் இறுதிநாளில் அரசு ஒடுக்கு முறை தலைவிரித்தாடியது. அன்று நடந்த மொழிக்காப்புப் போராட்டத்திற்குப் பின்னால், ஆதரவாகவும், ஊக்கமாகவும் ஒரு பெரும் கட்சி இருந்தது. எதிரில், பகை இலக்காக ஓர் அரசு இருந்தது. இன்று நடந்த பண்பாட்டுக் காப்புப் போராட்டத்தில், அரசியல் வாதிகளின் துணை வேண்டாம் என்று மாணவர்கள் கூறிவிட்டனர். ஆனால், அனைத்து அரசியல் கட்சிகளும் போராட்டத்தை ஆதரித்தன. எது பகை இலக்கு, என்பது இந்தப் போராட்டத்தில் இறுதிவரையில் தெளிவுபடுத்தப்படாமலே போயிற்று.

அண்மையில் நடந்து முடிந்த மாணவர் போராட்டம் பற்றிய இரண்டு கருத்துகளில் எவர் ஒருவருக்கும் மாறுபாடு இல்லை. ஒன்று, மாணவர்களின் உறுதி பற்றியது. இன்னொன்று, அவர்களின் போராட்ட ஒழுங்கு பற்றியது. உலகெங்கும் உள்ள தமிழர்கள் வியந்து பார்த்ததும், அங்கங்கு ஆதரவு ஆர்ப்பாட்டங்களை நடத்தியதும், இந்த இரண்டு பார்வைகளின் அடிப்படையில்தான். 16ஆம் தேதி தொடங்கிய போராட்டம், ஓரிரு நாள்களுக்கு நீடிக்கும் என்றுதான் பலரும் கருதினர். அதிகம் போனால், பொங்கல் விடுமுறை முடிந்து கல்வி நிலையங்கள், அலுவலகங்கள் திறக்கப்படும் வேளையில் மாணவர்கள் கலைந்து போய் விடுவார்கள் என்றே அனைவரும் கணித்தனர். மாணவர்களோடு சேர்ந்து போராட்டத்தில் கலந்து கொண்ட திரைப்பட இயக்குநர் அமீர் கூட, 'இன்னும் இரண்டு நாள்களில் இந்தப் போராட்டம் நீர்த்துப் போகலாம், ஆனால், இப்போது உருவாகியுள்ள எழுச்சி என்றைக்கும் நீர்த்துப் போகாது' என்றுதான் தொலைக்காட்சியில் கூறினார். எல்லோருடைய கணிப்பும் தவறாகிவிட்டது. ஆறு நாள்கள் இரவு பகலாக, கொட்டும் பனியிலும், குளிரிலும் போராட்டம் தொடர்ந்தது. ஆண்களும், பெண்களுமாய்த் திறந்த வெளியில் கூடி நின்றனர். எனினும், குறை சொல்ல முடியாத வகையில், கண்ணியமும் அங்கே குடிகொண்டிருந்தது. அந்த உறுதி அரசையும் கூட மலைக்க வைத்தது.


### கண்டன ஆர்ப்பாட்டம்



சமூக
வலைத்தளங்களில்
'தமிழ்ப் பொறுக்கிகள்'
என்று தொடர்ந்து
எழுதிவரும்
சு.சாமியின்
திமிர்த்தனத்தைக்
கண்டித்து
04.02.2017 சனி
காலை 10 மணிக்கு
சென்னையில்
**கண்டன**
**ஆர்ப்பாட்டம்!**

தலைமை
சுப. வீரபாண்டியன்

வாருங்கள் தமிழர்களே!!
திராவிட இயக்கத் தமிழர் பேரவை



பொதுவாக, கூட்ட உளவியல் என்று ஒன்று உண்டு. சிலர் பலராகும்போது, கட்டுப்பாடு தறிகெட்டுப்போகும். பல்லாயிரம்பேர் கூடியிருக்கிற இடம், குப்பைக் கூளமாக மாறுவது இயற்கை. ஆனால், எல்லாவற்றையும் மாணவர் கூட்டம் வென்று காட்டியது. அவர்கள் அங்கே தங்கிப் போராடிய அத்தனை நாள்களிலும், ஓர் ஒழுங்கு பேணிக் காக்கப்பட்டது. சென்னையில் மட்டுமின்றி, தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் அதே நிலைமை அச்சு அசலாகப் பின்பற்றப்பட்டது. இவையெல்லாம் போராட்டத்தின் நோக்கத்திற்கு வலிமை சேர்த்தன.

நாம் அறிந்த வரையில், மக்களின் கோரிக்கையை ஏற்று ஓரிரு நாள்களில் இப்படி ஓர் அவசரச் சட்டம் இயற்றப்பட்டதில்லை. மாணவர் எழுச்சியின் வலிமைதான், அதைத் தீர்மானித்திருக்கிறது. இறுதிக்கட்டத்தில்தான் அரசு பெரும் பிழை ஒன்றைச் செய்தது. நீதிபதி அரி பரந்தாமன் அவர்களை மாணவர்களிடம் பேச வைத்து, சட்டம் சரியாகத்தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்னும் உண்மையை, 23ஆம் தேதி மாலை அரசு உணர்த்தியது. அதனைக் காலையிலேயே செய்திருந்தால், வேண்டாத நிகழ்வுகள் எல்லாம் அரங்கேறியிருக்காது. ஆறு நாள்கள் அமைதியாக மட்டுமின்றி, மாணவர்களுக்கு ஆதரவாகவும் செயல்பட்ட தமிழக அரசின் காவல்துறை, திடீரென்று ஏழாவது நாள் தன் கோர முகத்தைக் காட்டத் தொடங்கியது. எல்லாவற்றினும் மிகப்பெரிய கொடுமை எதுவென்றால், ஊடகங்கள் வெளியிட்டிருக்கிற, வாகனங்களுக்குக் காவலர்களே தீ வைக்கும் காட்சிதான். மாணவர்களை அடித்துத் துவைப்பதற்கு முன்பு, அதனை நியாயப்படுத்துவதற்காக, இப்படிச் சில செயல்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இங்குதான், நமக்குப் பல வினாக்கள் எழுகின்றன. மாணவர்களின் போராட்டம்

### பீட்டாவைத் தடை செய்ய வேண்டுமா?

நடந்துமுடிந்த மாணவர்கள் போராட்டத்தில், மிகுதியும் பயன்படுத்தப்பட்ட சொற்கள் இரண்டு. ஒன்று, சல்லிக்கட்டு; இன்னொன்று, பீட்டா. சல்லிக்கட்டின் மீது மாளாத ஆர்வமும், பீட்டாவின் மீது தாள முடியாத வெறுப்பும் வெளிப்பட்டன. வெகுமக்களின் உணர்வுகளை மதிக்காத பீட்டா அமைப்பு, கடும் தாக்குதலுக்கு உள்ளானது இயற்கைதான். இருந்தாலும், பீட்டா அமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்னும் கோரிக்கையை ஏற்க இயலாது. நாட்டைக் காட்டிக்கொடுக்கிற அல்லது நாட்டின் நலனுக்கு நேர் எதிரான செயல்களில் ஈடுபடுகிற அமைப்பைத்தான் சட்டப்படி தடை செய்ய முடியும். பீட்டா அமைப்பு நீதிமன்றத்திற்குத்தான் செல்கிறது. நீதிமன்றத்திற்குச் செல்வதையே தடை செய்வது ஜனநாயக நாட்டில் இயலாத மற்றும் கூடாத ஒன்று. மேலும் பீட்டா அமைப்பைத் தடை செய்துவிட்டால், வேறு யாரும் சல்லிக்கட்டை எதிர்த்து நீதிமன்றத்திற்கே செல்ல மாட்டார்கள் என்பதற்கு எந்த உறுதியும் இல்லை. நீதிமன்றத்திலும் நின்று நிலைக்கக் கூடிய வகையில், சட்டம் இயற்றுங்கள் என்று அரசைத்தான் நாம் வலியுறுத்த முடியும். நம் கோரிக்கைகள் எவ்வளவு நியாயமானவையாக இருந்தாலும் எப்போதும் மாற்றுக் குரல்களுக்கு ஜனநாயகத்தில் இடம் இருக்கவே செய்கிறது. அரசுகளை நோக்கி நீள வேண்டிய கரங்கள், பீட்டாவை நோக்கி நீள்வது ஒருவிதமான திசை திருப்பலே ஆகும். களத்தில் நிற்கும் மாணவர்களிடம் இவை போன்ற உண்மைகளை விளக்காமல், "யாருடா அந்த பீட்டா, என் பேட்டா செருப்பாலேயே அடிப்பேன்" என்றெல்லாம் சிலர் உணர்ச்சிகளுக்கு ஏற்ப உரையாற்றிய காட்சிகளை நாம் பார்த்தோம். உணர்ச்சிக் கொந்தளிப்பான சூழலிலும் உண்மைகளைத் தெளிவுபடுத்தும் போக்கினைக் கையாள அறிவுச் சமூகம் முயன்றிட வேண்டும்.





நியாயம் என்கிற அடிப்படையில் மக்கள் அதனை ஆதரித்திருக்கலாம். ஆனால் சட்டத்தின் ஆட்சி என்று வருகிறபோது நியாயம், அநியாயம் என்பதற்கெல்லாம் இடமில்லை. சட்டம் என்ன சொல்கிறது என்று மட்டும்தான் பார்க்க முடியும். அப்படிப் பார்த்தால், நான்கு பேருக்கு மேல் ஓரிடத்தில் ஒன்றாகக் கூடுவதையே சட்டத்திற்குப் புறம்பான கூடுதல் என்றுதான் காவல்துறை கூறும். அப்படி இருக்க, பல்லாயிரக்கணக்கானவர்கள் நாடு முழுவதும் ஒரே இடத்தில், கூடியிருக்கும்போது, அதனை ஆறு நாள்கள் அனுமதித்த அரசு, திடீரென்று ஏழாவது நாள் அதனை கலைக்க முற்பட்டதற்கு என்ன காரணம்? அனைவரும் கூடியிருப்பதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்ததிலும் ஓர் அரசியல் இருக்கிறது. சட்டென்று கலைக்க முயன்றதிலும் ஓர் அரசியல் இருக்கிறது. இரண்டுக்கும் இடையில் பல்வேறு எதிர்கால அரசியல் ரகசியங்கள் இருக்கின்றன.

எவ்வாறாயினும் மாணவர்களின் நோக்கம் நிறைவேறியிருக்கிறது. முறைப்படியான சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு நிகழ்வு மீதமிருக்கிறது. இப்போது தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றியுள்ள சட்டத்தை, 9ஆவது அட்டவணையில் சேர்ப்பதன் மூலமே, அதற்குக் கூடுதல் பாதுகாப்பு வழங்க முடியும். எவ்வாறாயினும் இந்தச் சட்டமும் நிரந்தரமானது என்றோ, எவராலும் எக்காலத்திலும் மாற்றவே முடியாது என்றோ கூற இயலாது. ஏனெனில் நிரந்தரச் சட்டம் என்ற ஒன்று இல்லவே இல்லை. எந்த ஒரு சட்டத்தையும் நீதிமன்றம் சென்று மாற்றக்கோருகிற உரிமை, அல்லது திருத்தம் கோருகிற உரிமை எல்லோருக்கும் உண்டு. அரசமைப்புச் சட்டமே பலமுறை திருத்தப்பட்டும், மாற்றப்பட்டும் உள்ளது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். 9ஆம் அட்டவணையிலும் சேர்த்து விட்டால், இப்போதைக்குப் பாதுகாப்பாக எதைச் செய்ய முடியுமோ, அதைச் செய்திருக்கிறோம் என்று பொருள். இந்த அளவில், மாணவர்களின் தைப்புரட்சி மாபெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறது என்று வரலாறு குறித்துக் கொள்ளும்.●

## வீர யுகமும் – கணினி யுகமும்

சல்லிக்கட்டுக்கு ஆதரவாகத் தமிழ்நாடே ஓரணியில் திரண்டு நிற்கிறது என்றாலும், அது குறித்த வேறு பார்வைகளுக்கும் நாம் இடம் தருதல் வேண்டும். ஏறுதழுவுதல் என்பது, நம் பழந்தமிழ்ப் பண்பாடு. நாயக்கர்களின் ஆட்சிக் காலத்திற்குப் பிறகு, அது சல்லிக்கட்டாக மாறியது. காளை மாடுகளின் கொம்புகளில் சல்லிக்காசுகளைக் கொண்ட கட்டுகளைக்கட்டி, காளைகளை அடக்குவோர், அதனை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லும் வீர விளையாட்டே சல்லிக்கட்டு. அது காலப்போக்கில், தவறாக ஜல்லிக்கட்டு என்று ஒலிக்கப்படுகிறது. இப்போது அந்த சல்லிக்கட்டு நடைமுறையில் இல்லை. ஏறுதழுவுதல்தான் நடைபெறுகின்றது.

ஏறுதழுவுதல் என்பதும் கூட, ஒட்டுமொத்தத் தமிழர்களின் பண்பாடு என்று கூறிவிட முடியாது. முல்லை நில மக்களிடம் அந்த வழக்கம் இருந்திருக்கிறது. "கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும் புல்லாள் ஆய மகள்" என்கிறது முல்லைக்கலி. முல்லை நிலத்து ஆயர்களிலும் மூவகையினர் உண்டு. கோட்டினத்து ஆயர், கோவினத்து ஆயர், புல்லினத்து ஆயர் என அவர்கள் அழைக்கப்படுவார்கள்.



காளைகளை வளர்ப்போர், பசு வளர்ப்போர், ஆடுகள் வளர்ப்போர் என்பது அப்பிரிவினையின் பொருள். காளைகளை வளர்ப்போர்தான் ஏறு தழுவுதலில் பேரார்வம் காட்டியவர்கள். வீர யுகத்தின் விளையாட்டு அது.

கணினி யுகத்தில் வாழும் இன்றைய இளைஞர்கள் அந்த வீர யுகத்தின் விளையாட்டை வேண்டி நின்ற போராட்டம் வரலாற்றில் ஒரு வியப்புதான். அதில் பிழை ஒன்றுமில்லை. நம் தொன்மையான பண்பாட்டில் நமக்குள்ள விருப்பம் ஆழ்மனத்தில் படிந்து கிடக்கும். அதன் வெளிப்பாடாகவும் இந்தப் போராட்டம் இருந்திருக்கலாம். இதில் விலங்குகள் வதை என்று பெரிதாக ஒன்றுமில்லை. எனினும், கொம்புகள் குத்தி இளைஞர்கள் இறந்து போவதை ஒவ்வோர் ஆண்டும் நாம் பார்த்திருக்கிறோம். அதனைத் தவிர்க்கலாமே என்னும் எண்ணத்தில்தான் ஏறுதழுவுதலுக்கான மாற்றுக் குரல்களும் வெளிப்படுகின்றன. எந்த விளையாட்டில்தான் ஆபத்தில்லை என்று கேட்பது இதற்கான விடையாகுமா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

## அனுமதிப்பதும் – அவமதிப்பதும்

மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் இரண்டு செய்திகள் அழுத்தமாகச் சொல்லப்படுகின்றன. தலைமையே இல்லாமல் தன்னெழுச்சியாக நடந்த போராட்டம் என்றும், அரசியல் வாதிகளை முற்றிலுமாகப் புறக்கணித்த போராட்டம் என்றும் சொல்லப்படுகிறது. 'இங்கு யாரும் தலைவர்கள் இல்லை, நாங்கள் எல்லோருமே தலைவர்கள்' என்பது சொல்வதற்கும், கேட்பதற்கும் சுவையாக இருக்கிறது. எனினும் அதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை நாம் புறந்தள்ளி விட முடியாது. இறுதியில், யார் முடிவெடுப்பது என்னும் கேள்வி எழும்போது, வேறுபட்ட நிலைகள் ஏற்பட்டதற்கு அதுதான் காரணம். ஒரு தலைவர் என்று இல்லாமல் கூட்டுத்தலைமை என்று வேண்டுமானால் சிந்திக்கலாம். எப்படி இருந்தாலும் ஓர் இயக்கத்திற்குத் தலைமை என்பது தேவையான ஒன்றாகவே இருக்கிறது.

அரசியல்வாதிகளே வேண்டாம் என்று மாணவர்கள் கூறியதைத் தொலைக்காட்சிகளில் பார்க்க முடிந்தது, அது அவர்களின் உரிமை. அதில் நாம் குறுக்கிட முடியாது. ஆனாலும் ஒரு செய்தியை இங்கு பதிவு செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு கட்சி அல்லது ஒரு தலைவரின் தலைமையை அவர்கள் ஏற்காமல் இருக்கலாம். ஆதரவைத் தெரிவிக்க வருகிற தலைவர்களிடம் ஆதரித்து உரையாற்ற வேண்டாம் என்று கூட கேட்டுக்கொள்ளலாம். ஆனால் அப்படி வருகின்ற அரசியல் தலைவர்களின் மீது, தண்ணீர்ப் பைகளை வீசி அவமதிக்க வேண்டியதில்லை. ஒருவரை உள்ளே அனுமதிப்பது வேறு, வெளிப்படையாக அவமதிப்பது வேறு என்பதை, கண்ணியமாக ஒரு போராட்டத்தை நடத்திய நம் பிள்ளைகள் ஏன் உணரவில்லை?



எந்த அரசியல்வாதிகள் தங்களுக்கு வேண்டாம் என்று மாணவர்கள் கூறினார்களோ, அதே அரசியல்வாதிகள்தான் மாணவர்கள் வேண்டிய சட்டத்தை, சட்டமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள் என்பதையும் நினைவில் கொள்வது நல்லது.

2017 பிப்ரவரி 1–16

# சுபவீ சுற்றுப்பயண விவரம்



| | | | |
|---|---|---|---|
| 01.02.2017 | காலை 9 மணி | வேலூர் | சிங்காராயர் இல்ல மணவிழா |
| 04.02.2017 | மாலை 6 மணி | கொளத்தூர் | நூல் வெளியீட்டு விழா |
| 05.02.2017 | காலை 10 மணி | சென்னை, ராயபுரம் | தி.மு.க. கருத்தரங்கம் |
| 06.02.2017 | மாலை 6 மணி | கல்பாக்கம் | பொங்கல் விழா |
| 08.02.2017 | காலை 9 மணி | சிதம்பரம் | மணவிழா |
| 11.02.2017 | மாலை 6 மணி | மதுரை | இலக்கிய விழா |
| 15.02.2017 | மாலை 6 மணி | சேலம் | தி.மு.க. கருத்தரங்கம் |
| 16.02.2017 | காலை 9 மணி | ஈரோடு | மணவிழா, பொறியாளர் சங்க விழா |

# செயல் தலைவரின் செயல் வேகம்...

**இ. பரந்தாமன்,**
**தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர்**

‘புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?’ ‘தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும்’ என்பார்கள். இவ்விரு பொன்மொழிகள் பொய்த்துப் போகவில்லை. இதனை மெய்ப்பித்துக் காட்டி வருகிறார் தி.மு.க.வின் செயல் தலைவர் தளபதி அவர்கள்.

ஒரு தலைவரைத் தந்தையாய்க் கொண்டிருந்தாலும், தன் தந்தையைத் தலைவராகவே பார்த்து வரும் தலைவர் இவர். எனவேதான் தந்தைக்கு இருக்கும் அந்தப் போர்க்குணம், வேகம், விவேகம் அத்தனையும் பெற்றுச் செயல் தலைவராகப் பொறுப்பேற்ற ஒரு மாதத்தில் ஒரு யுகப் புரட்சிக்கு சொந்தக்காரராகத் திகழ்ந்திருக்கிறார்.

மதுரை அலங்காநல்லூரில் கண்ணகி நீதி கேட்ட மண்ணில் "சல்லிக்கட்டு தடை நீக்கக் கோரி" அறவழி ஆர்ப்பாட்டம் நடத்திய அடுத்த நாள் 4.1.2017 அன்று செயல் தலைவராகப் பொறுப்பேற்றார்.


செயல் தலைவர் ஆனவுடன் தான் எழுதிய முதல் கடிதத்தில், கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே! உங்களில் ஒருவனாக இக்கடிதத்தை எழுதுகிறேன் "புதிய தமிழ்நாட்டை படைத்திடுவோம் வாரீர்! வாரீர்!" என்று எழுதத் தொடங்கி, பின்பு "அன்பின் அடையாளம் போதும்; அடிமை நிலை வேண்டாம்" என்ற கடிதத்தின் மூலம் திராவிட இயக்கத்தின் சுடர் ஒளி என்பதைப் பறைசாற்றும் விதமாக கழகத் தோழர்கள் யாரும் தன் காலில் விழக்கூடாது என்று அன்புக் கட்டளை பிறப்பித்தார். பெரியாரின் பேரன் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம், கீழடியில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் தொடர்ந்து நடைபெற, மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துக் கடிதம் எழுதியதன் மூலம், தி.மு.கழகம் தமிழர் பண்பாடு, நாகரிகம், ஆகியவற்றைப் பாதுகாக்கப் போராடிய இயக்கத்தின் அடிச்சுவட்டில் வந்தவர் தளபதி என்பதை உலகிற்கு உணர்த்தியுள்ளார்.

"இந்தியா டுடே" சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு இலவசமும், வளர்ச்சித் திட்டங்களும் இன்றியமையாதது என்று சுட்டிக்காட்டினார். ஓர் அரசுக்கு ‘கார்ப்பொரேட்’ என்பதும் தேவை சாதாரண மனிதனும் தேவை. இரண்டும் நாட்டின் இரு கண்கள் என்றால் ‘வளர்ச்சி’ என்பதை நெற்றிக் கண்ணாகவே நான் பார்க்கிறேன் என்று கூறி தனது பொருளாதாரப் பார்வையை நாட்டிற்குப் பறைசாற்றினார் செயல் தலைவர் தளபதி அவர்கள்.

செயல் தலைவராகப் பொறுப்பேற்ற நாள் முதல், காலை, மாலை, நாள் தவறாது கழக அலுவலகமான அண்ணா அறிவாலயத்திற்கு வருகிறார். தலைமைக் கழகத்தின் நிர்வாகிகள் வருகைப் பதிவேட்டை ஒருநாள் திடீரென்று ஆய்வு செய்த அந்த மாலைப் பொழுதில், தலைவர் கலைஞரை என் கண் முன்னால் கண்டேன்.

ஆண்டுதோறும் நடைபெறும் பொங்கல் விழா இந்த ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கோவூரில் நடைபெற்றது. முதல் முறையாகக் கழகச் செயல் தலைவராகச் சென்று கலந்து கொண்டது மட்டுமல்லாமல், தனது பேரக் குழந்தைகளுடன் சென்று மக்களுடன் கொண்டாடினார். ஒரு தலைவர் வீட்டுக் குழந்தைகள், கிராமத்தில் உள்ள குழந்தைகளுடன் சேர்ந்து கொண்டாட வேண்டுமென்ற சமத்துவபுரம் கண்ட கலைஞரின் மகன் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார்.



தி.மு.க. வரலாற்றில் மிக முக்கியமான போராட்டம் மும்முனைப் போராட்டம். இதில் ஒரு போராட்டம்தான் டால்மியாபுரம் இரயில் நிலையத்திற்குக் கல்லக்குடி என்று பெயர் மாற்ற தலைவர் கலைஞர் தலைமையில் இரயில் மறியல் போராட்டம். இந்த இயக்கத்தின் நான்காம் தலைமுறையான தளபதி அவர்கள் செயல் தலைவராகப் பொறுப்பேற்றவுடன் முதல் இரயில் மறியல் போராட்டம் 20.1.2017 அன்று சென்னை, மாம்பலம் இரயில் நிலையத்தில் வெற்றிகரமாக அவர் தலைமையில் நடந்தது. இது இயக்கத்தின் வரலாற்றை விரிவு படுத்துவதாக அமைந்தது.

1965இல் இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழ் மொழி காக்க வெகுண்டு எழுந்த இளைஞர் கூட்டத்தின் வித்துக்கள் 16.1.2017 முதல் 23.1.2017 வரை நடைபெற்ற இன்றைய இளைஞர்கள். மாணவர்கள் போராட்டத்தின் மத்தியில் 16.1.2017 அன்று செயல் தலைவர் தளபதி அவர்கள் நேரில் சென்று ‘கலங்காதீர்கள்... நானிருக்கிறேன். இதோ உங்களுக்காக நான் தமிழ்நாடு காவல்துறை தலைவரைச் சந்தித்து மாணவர்களின் போராட்டத்திற்கு உரிய மதிப்பும், பாதுகாப்பும் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை மனுவை அளித்து விட்டுத்தான் உங்கள் முன்னால் நிற்கிறேன்’ என்று சொன்னபோது அண்ணாவின் அடிச்சுவட்டில் வந்த தலைவர் கலைஞரின் மகன் என்பதை பொறுப்பேற்ற சில தினங்களிலேயே மீண்டும் மீண்டும் பறைசாற்றியுள்ளார்.

சல்லிக்கட்டு குறித்து தமிழக அரசு கொண்டு வந்த அவசரச் சட்டத்தை தமிழ்நாடு சட்டமன்றத்தில் சட்ட முன்வடிவாக 23.1.2017 அன்று மாலை 5.00 மணிக்கு தாக்கல் செய்தபோது ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவராக அச்சட்டத்தை வரவேற்று சில ஆக்கப்பூர்வமான திருத்தங்களுக்கான யோசனையைத் தெரிவித்து சட்டம் நிறைவேறுவதற்கு உறுதுணையாக இருந்துள்ளார் என்பது தளபதியின் அரசியல் பண்பாடு.

அன்று இரவே தமிழகப் பொறுப்பு ஆளுநர் மாண்புமிகு வித்யா சாகர் ராவ் அவர்களைச் சந்தித்து அமைதியாக, அறவழியில் போராட்டம் நடத்திவந்த இளைஞர்களை, மாணவர்களை தடியடி நடத்தியும் கண்ணீர்ப் புகை குண்டு வீசியும் சில விரும்பத்தகாத சம்பவங்கள் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் நடைபெற்றதை விசாரிக்க பணியில் இருக்கும் உயர்நீதி மன்ற நீதிபதியின் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்ததன் மூலம் இளைய தலைமுறையின் இணையில்லாத தலைவர் ஆனார்.

செயல் தலைவராகப் பொறுப்பேற்ற பின் கலந்து கொள்ளும் முதல் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் கோவை மாநகரில் நடைபெற்றது. அந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் மொழிப் போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தி, இந்த இயக்கத்தின் வீர மறவர்களின் தியாகத்தை அடுத்த தலைமுறையினர்க்கு கொண்டு செல்லும் தலைவராக உயர்கிறார்.

4.1.2017 அன்று செயல் தலைவராகப் பொறுப்பேற்ற தளபதி அவர்களிடம் ஒரு மாதத்தில்தான் எத்தனை வேகம்!

இயக்கத்திற்கு இவர் செயல் புதிதன்று... ஆனால் பொறுப்பு புதியது. பொறுப்பின் பெயருக்கேற்றவாறே விரைந்து செயல்படும் செயல் தலைவர் தமிழக அரசியலின் நாயகர். ●

# எழுவர் விடுதலை
# எப்போது தீரும் ஏக்கம்?

ஆர். முத்துக்குமார்

எழுவர் விடுதலை என்பது எப்போதும் எட்டாக்கனிதானா என்ற ஏக்கம் பொதிந்த கேள்வி பலருக்கும் இருக்கிறது. தலைவர்களின் பிறந்தநாள், நினைவுநாள் வரும்போதும், சுதந்திர நாள், குடியரசு நாளின்போதும் மட்டும் பரபரப்பான விவாதப்பொருளாக இருந்துவிட்டு, பிறகு மீண்டும் பேசாப்பொருளாக முடங்கிவிடுகிற அவலம் தொடர்கிறது. இப்போதும்கூட குடியரசு நாளை ஒட்டியே இந்தக் கட்டுரையும் எழுதப்படுகிறது.



கூடுதல் செய்தி என்னவென்றால், ராஜீவ் கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட எழுவரில் இருவர் தொடர்ந்த வழக்கை 2017 சனவரி மூன்றாம் வாரத்தில் சென்னை உயர்நீதிமன்றம் விசாரித்தபோது, “14 ஆண்டுகளுக்கு மேல் சிறையிலுள்ள 180 பேரை குடியரசு தினத்தை முன்னிட்டு விடுவிக்க இருக்கிறது தமிழக அரசு. அந்தப் பட்டியலில் ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் பெயர்கள் உள்ளனவா என்று பார்த்துவிட்டுச் சொல்கிறோம்” என்று அரசு வழக்கறிஞர்கள் சொல்லவே, வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

உண்மையில், எழுவர் விடுதலை எப்போதோ நடந்தேறியிருக்கவேண்டிய நிகழ்வு. அதற்கான பெருவாய்ப்பு ஜெயலலிதா முதல்வராக இருந்த 2014 ஆம் ஆண்டிலேயே கிடைத்தது. அப்போது ஜெயலலிதாவின் முன்னால் இரண்டு வாய்ப்புகள் இருந்தன. ஒன்று, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 161 ஆம் பிரிவைப் பயன்படுத்துவது. இது நேர்மறையான, அதிகாரமோதலுக்கு வழிவகுக்காத வழி. மற்றொன்று, இந்தியக் குற்றவியல் சட்டம் 432 ஆம் பிரிவைப் பயன்படுத்துவது. இது சரியான வழி என்பதைத் தாண்டி, சிக்கல் ஏற்பட்டால் மாநில அரசு தப்பித்துக்கொள்ள ஏதுவான திட்டிவாசல் வழி.

முதல் வாய்ப்பைத்தான் முதல்வர் ஜெயலலிதா பயன்படுத்துவார் என்று பலரும் சொல்லிக்கொண்டிருந்த வேளையில், அவர் இரண்டாம் வாய்ப்பைத் தேர்வுசெய்தார். அதையே மத்திய அரசுக்குக் கடிதமாகவும் எழுதினார். சிக்கல் என்னவென்றால், ராஜீவ் கொலை வழக்கு மத்தியப் புலனாய்வு அமைப்பால் விசாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தடா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட ஒன்று. இந்திய குற்ற விசாரணை முறைச் சட்டம் 435 ன்படி, இதுபோன்ற வழக்குகளில் தமிழ்நாடு அமைச்சரவையின் முடிவு குறித்து மத்திய அரசுடன் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.

மத்திய அரசுக்குத் தகவல் தெரிவிப்பதுதான் கலந்தாலோசனை என்பது தமிழக அரசின் பார்வை. ஆனால் மத்திய அரசிடம் கலந்துபேசி, சம்மதம் பெறுவதுதான் கலந்தாலோசனை என்பது மத்திய அரசின் பார்வை. பலரும் பயந்ததுபோலவே மத்திய மாநில அரசுகளிடையே அதிகாரப்போட்டி உருவானது. யாருக்கு அதிகாரம், யார் பெரியவர் என்ற போட்டி மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே உருவானது. அப்படியொரு போட்டி உருவானதற்கு இன்னொரு வலுவான காரணமும் இருக்கிறது. அது முதலமைச்சர் ஜெயலலிதா தமிழக சட்டமன்றத்தில் ஆற்றிய உரையில் இடம்பெற்ற சில வரிகள்:

‘சுதேந்திர ராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன், பேரறிவாளன் என்கிற அறிவு, நளினி, ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகிய ஏழு பேரை விடுவிப்பது என்ற தமிழக அரசின் முடிவு குறித்து மத்திய அரசு மூன்று நாட்களுக்குள் தமது கருத்தைத் தெரிவிக்காமல் காலம் தாழ்த்தினால், குற்ற விசாரணை முறைச் சட்டம் 432ல் மாநில அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி ஏழுபேரும் விடுவிக்கப்படுவார்கள்.”

உடனடியாக உச்சநீதிமன்றத்தை அணுகிய மத்திய அரசு, எங்களுடைய சம்மதம் இல்லாமல் ஏழுபேரையும் விடுவிக்கும் அதிகாரம் தமிழக அரசுக்கு இல்லை என்று சொல்லிவிட்டது. மத்திய அரசின் கருத்தை உச்சநீதிமன்றமும் ஏற்றுக்கொள்ளவே, ஏழுபேரின் விடுதலைக்குப் பெருந்தடை ஏற்பட்டது. இது நடந்தது 2014ல். அதன்பிறகு 2014ல் மக்களவைத் தேர்தல், 2016ல் சட்டமன்றத் தேர்தல் எல்லாம் முடிந்துவிட்டது. எழுவர் விடுதலைக்காக மத்திய அரசுடன் மோதிய முதல்வர் ஜெயலலிதா அகால மரணமடைந்து, ஓ.பன்னீர் செல்வம் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள நிலையில் தற்போது எழுவர் விடுதலை பற்றிய பேச்சு எழுந்திருக்கிறது.

நன்னடைத்தை காரணமாகவோ அல்லது ஆயுள் தண்டனையான பதினான்கு ஆண்டுகளைக் கடந்தோ சிறையில் வாடும் கைதிகளை விடுவிக்கும் நடைமுறை கடந்த திமுக ஆட்சிக்காலம் வரைக்கும் பின்பற்றப்பட்டது. ஆனால் 2011ல் ஜெயலலிதா ஆட்சியில் அந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படவில்லை. என்றாலும், புதிய முதல்வர், புதிய பொதுச்செயலாளர் வந்திருக்கும் நிலையில், 180 பேரை விடுவிக்க முடிவுசெய்திருப்பது ஆரோக்கியமான அணுகுமுறை.

அதேசமயம், தண்டனைக் காலத்தைத் தாண்டி பல ஆண்டுகள் சிறையிலிருக்கும் இரண்டு பேரை மட்டும் தேர்வுசெய்து விடுதலை செய்யாமல், ஏழு பேரையுமே விடுதலை செய்வதுதான் நல்லதொரு நடைமுறையாக இருக்கும். இதற்கான முன்மாதிரிகளும் இருக்கவே செய்கின்றன. இன்னும் சொல்லப்போனால், மத்தியில் ஆளும் மோடி அரசுக்குப் பிடித்தமான முன்னுதாரணமே இருக்கிறது.

சுதந்தர இந்தியாவின் முதல் பயங்கரவாத நிகழ்வு என்று காந்தி படுகொலையைத்தான் சொல்லவேண்டும். உலகமே உற்றுநோக்கிய காந்தி கொலைவழக்கில் குற்றவாளிகளான நாதுராம் கோட்சேவுக்கும் நாராயண ஆப்தேவுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. கோட்சேவின் சகோதரர் கோபால் கோட்சேவுக்கு ஆயுள் தண்டனை தரப்பட்டது. நாதுராமும் ஆப்தேவும் தூக்கிலிடப்பட்டனர். கோபால் கோட்சே சிறையிலடைக்கப்பட்டார்.

தீர்ப்பின்படி 14 ஆண்டுகள் சிறையில் இருந்த கோபால் கோட்சே, தன்னை விடுவிக்கவேண்டுமென உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். ஆனால் அவரது மனுவை நிராகரித்துவிட்டது உச்சநீதிமன்றம். இது நடந்தது 1961 ஆம் ஆண்டில். அதன் பொருள் என்னவென்றால், ஆயுள் தண்டனை என்பது 14 ஆண்டுகளுக்கு மட்டுமானது அல்ல, ஆயுள் முழுக்கவும் என்பதுதான். ஆனால் உச்சநீதிமன்றத் தீர்ப்பு வெளியாகி நான்கு ஆண்டுகள்கூட நிறைவடையவில்லை, திடீரென ஒருநாள் கோபால் கோட்சே விடுதலை செய்யப்பட்டார். ஆக, ஆயுள் தண்டனை என்பது ஆயுள் முழுமைக்குமானது அல்ல. அப்படித்தானே!

இது எப்படிச் சாத்தியமானது?

சட்டத்தில் விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்பும் அதிகாரமும் மாநில அரசுக்கு இருக்கின்றன. அவற்றை நேர்த்தியாகவும் நியாயமாகவும் பயன்படுத்திக்கொள்ளும் வல்லமை மகாராஷ்ட்ரா மாநில முதல்வர் வசந்தராவ் நாயக்குக்கு இருந்தது. கோபால் கோட்சேவின் விடுதலை சாத்தியமானது.

இப்போதும்கூட ஒன்றும் கெட்டுப்போய்விடவில்லை. சரியான முறையில் அணுகினால், எழுவர் விடுதலை தொட்டுவிடும் தூரத்தில்தான். என்ன செய்யப்போகிறார் முதலமைச்சர் ஓ.பி.எஸ்? ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

அச்சில் உதவி
**அ.சாதிக் பாட்சா**
ஜெம் கிராபிக்ஸ்

இணையதளம்
**www.keetru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

# திண்டுக்கல்லில், புலவர் குழந்தை கருத்தரங்கம்




**தி**ராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக திண்டுக்கல் வி.வி.எஸ்.மகால் அரங்கில் 8.1.2017 அன்று மாலை 5 மணி அளவில், புலவர் குழந்தையின் இராவண காவியம் அறிமுகக் கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கிற்கு மாவட்டத் தலைவர் ச.ஞானசேகரன் தலைமை ஏற்க, மாவட்ட இலக்கிய அணிச் செயலாளர் ச.வடிவேல் வரவேற்புரையாற்ற மாவட்டச் செயலாளர் கு.ஆனந்தராஜ், மாவட்ட பொருளாளர் செ.தமிழினியன் ஆகியோர் முன்னிலையில் மாவட்டச் செயற்குழு உறுப்பினர் ச.சுப்பிரமணி தொடக்க உரையாற்றித் தொடக்கி வைத்தார். பின்னர் கருஞ்சட்டைத் தமிழர் வாசகர் மாட்ட மாநில அமைப்பாளர் சி.ரவிச்சந்திரன் அறிமுக உரையைத் தொடர்ந்து மாநில இலக்கிய அணி ஒருங்கிணைப்பாளர் லதாராணி பூங்காவனம் நூல் அறிமுகச் சிறப்புரையாற்றினார். நிறைவில் நகரத் தலைவர் நடராசன் நன்றி உரையுடன் கருத்தரங்கு நிறைவடைந்தது.

# மணப்பாறை–கிளை அமைப்பு



**தி**ருச்சி மாவட்டம் மணப்பாறையில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கிளை 17.1.2017அன்று தொடங்கப்பட்டது. மாவட்டத் தலைவர் தீனதயாளன், மாவட்டச் செயலாளர் பழ.செல்வன் ஆகியோரின் ஏற்பாட்டில், மாநிலக் கூடுதல் அமைப்புச் செயலாளர் ப.புலேந்திரன், மணப்பாறை நகரத் தலைவராக சரவணகுமார், நகரச் செயலாளராக தம்பிதுரை, நகர அமைப்பாளராக தமிழ்வாணன் ஆகியோரை நியமனம் செய்தார். இயக்க மகளிர் அணித் தோழர்களாக சுபா, கிருபா ஆகியோரும் இந்நிகழ்வில் இணைந்தனர்.

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

**கருஞ்சட்டைத் தமிழர்**

# வெட்கப்படுகிறோம்!

**ஆர்**.எஸ்.எஸ் தொண்டர்கள் என்றாலே ஒழுக்க சீலர்கள் என்று அவர்கள் பீற்றிக் கொள்வார்கள். அந்தக் கூற்றை அடித்து நொறுக்கியிருக்கிறார், . மேகாலாயா ஆளுநராக ஆக்கப்பட்ட மூத்த ஆர்.எஸ்.எஸ். தலைவர்களில் ஒருவரான வி.சண்முகநாதன்..

2015 மே மாதம் மேகாலாயா ஆளுநராக மத்திய அரசினால் அமர்த்தப்பட்ட சண்முகநாதன், அதே ஆண்டு செப்டம்பர் முதல் அருணாச்சலப் பிரதேசக் கூடுதல் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டார். அவர் மீது பாலியல் குற்றச்சாற்றுகளை அங்கு ராஜ் பவனில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவரும் இப்போது தெரிவித்துள்ளனர். 'ஆளுநர் மாளிகையை இளம் பெண்களின் விடுதியாக அவர் ஆக்கிவிட்டார்' என்று கூறுகின்றனர். குடியரசுத் தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர் ஆகியோருக்குக் கடிதங்களை அவர்கள் அனுப்பியுள்ளனர். வேறு வழியின்றி சண்முகநாதன் தன் பதவியிலிருந்து விலகவிருப்பதாக நாளேடுகள் கூறுகின்றன.

மேகாலயாவில் ஏற்பட்ட எதிர்ப்பு காரணமாக, குடியரசு நாளில் அவர் அருணாச்சல பிரதேசத்தில் போய்க் கொடியேற்றி இருக்கிறார். பொதுவாக, கூடுதல் ஆளுநராக இருக்கும் மாநிலத்தில் ஆளுநர்கள் கொடியேற்றுவதில்லை. தமிழ்நாட்டில்



கூட, கூடுதல் ஆளுநரான வித்யாசாகர் ராவுக்குப் பதிலாக, முதல்வர் பன்னீர்செல்வம் கொடியேற்றியதைக் கண்டோம்.

ஆர்.எஸ்.எஸ் இயக்கம் இப்படி அம்பலப்பட்டு நிற்பதைக் கண்டு நாம் பெரிய மகிழ்ச்சி அடைய முடியவில்லை. காரணம், அங்குள்ளவர்கள் தமிழர்களையும் தரக்குறைவாகத்தானே நினைத்திருப்பார்கள்! ஆம், சண்முகநாதன் தமிழ்நாட்டிற்கும் சேர்த்து ஒரு தலைகுனிவைக் கொண்டு வந்திருக்கிறார்.

வெட்கப்படுகிறோம்!



**சே**லத்தில் பேரவையின் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது மாநிலக் கூடுதல் அமைப்புச் செயலாளர் ப.புலேந்திரன், மாநிலக் கொள்கை பரப்புச் செயலாளர் குமார், மாவட்டத் தலைவர் கந்தசாமி, மாவட்டச் செயலாளர் சுந்தரவதனம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**மறக்க முடியுமா?**

# நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார்

**எழில்.இளங்கோவன்**

ஆய்வுப் பேரறிஞர்களுள் ஒருவராய்த் திகழ்ந்த மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் படித்தது பத்தாம் வகுப்பு மட்டுமே.

வெறும் திண்ணைப் பள்ளியில் மட்டுமே படித்துவிட்டு பண்டிதர் ஆனவர், ஆய்வறிஞர், தலைசிறந்த உரைவேந்தர்களுள் ஒருவர், ந.மு.வேங்கடசாமி நாட்டார்.

இவரின் இயற்பெயர் சிவப்பிரகாசம். ஆனால் இவர் ந.மு.வேங்கடசாமி என்றே தமிழுலகில் நிலைபெற்ற புகழைப் பெற்றிருக்கிறார்.

தஞ்சை மாவட்டம், திருவையாறு வட்டம், நடுக்காவேரி இவரின் சொந்த ஊர்.

தாயார் தைலம்மாள், தந்தை முத்துசாமி.

இவர்களின் ஐந்தாம் மகன் சிவப்பிரகாசம் என்ற வேங்கடசாமி.

1884ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2ஆம் நாள் பிறந்தார்.

சிறு வயதில் அக்காலத் திண்ணைப் பள்ளியில் படித்தார். இக்கால நான்காம் வகுப்புக்குச் சமமான படிப்பு அது.

திண்ணைப் பள்ளியிலும், தந்தையிடமும் எண்சுவடி, குழிமாற்று, நெடுங்கணக்கு, இலக்கம், நெல்லிலக்கம், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, நன்னெறி, வெற்றிவேட்கை, இன்னாநாற்பது, கார்நாற்பது, களவழிநாற்பது போன்றவைகளைக் கற்றுத் தேர்ந்தார்.

இவரின் தந்தை வேளாண் தொழில் செய்பவர். அதனால் பகலில் தந்தைக்கு உதவியாக கழனியில் வேலை செய்வதுடன், இரவில் படிக்கத் தொடங்கினார்.

இவருக்கு ஆசிரியர் என்று யாரும் இல்லை. ஆசிரியர் துணையின்றி நன்னூல் உள்பட தமிழ் இலக்கண இலக்கியங்களையும், சிற்றிலக்கியங்களையும் கற்றார்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவிய பாண்டித்துரை அவர்கள் அச்சங்கத்தின் சார்பில் செந்தமிழ்க் கல்லூரி ஒன்றையும் நிறுவி இருந்தார். அக்கல்லூரியில் மூவகைத் தேர்வுகள் இருந்தன.

1. நுழைவுப் பண்டிதம் (பிரவேசப்பண்டிதம்)
2. இடைநிலைப் பண்டிதம் (பாலபண்டிதம்)
3. பண்டிதம்

ஆறு ஆண்டுகள் படிக்க வேண்டிய இப்பண்டிதர் படிப்பை 1905–1907 வரை மூன்று ஆண்டுகளில் முடித்து முதல் மாணவராகத் தேறினார் ந.மு.வேங்கடசாமி அவர்கள்.

இவர் அக்கல்லூரியில் படிக்கவில்லை. மாறாக தனித்தேர்வராகத் தேர்வு எழுதினார்.

இவரின் அறிவாற்றலைக் கண்டு வியந்த பாண்டித்துரையார், இவருக்குத் தங்கத்தாலான அணி ஒன்றைப் பரிசளித்துப் பாராட்டியிருக்கிறார்.

கோவை தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளியின் தமிழாசிரியர், எஸ்.பி.ஜி. கல்லூரின் தமிழாசிரியர், திருச்சி பிசப் கல்லூரியின் தலைமைத் தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் பேராசிரியராக பணியாற்றிய இவர் –

தமிழவேள் உமாமகேசுவரனார் பரிந்துரையில், கரந்தைத் தமிழ்கல்லூரியின் முதல்வராகப் பெறுப்பேற்றுத் திறம்படப் பணியாற்றியுள்ளார்.

உ.வே.சாமிநாதரால் ஓலைச்சுவடியிலிருந்து அச்சுக்குக் கொண்டுவரப்பட்ட அடியார்க்கு நல்லார், அரும்பதவுரைகாரர் ஆகியோரின் உரையுடன் கூடிய சிலப்பதிகாரத்திற்கு மிகச் சிறந்த உரை எழுதியவர் ந.மு.வேங்கடசாமி அவர்கள்.

அதைத் தொடர்ந்து மணிமேகலைக்கும் உரை எழுதினார். மணிமேகலையில் காணும் 30 காதைகளுள் 'விழாவறை காதை' தொடக்கம் 'வஞ்சிமாநகர் புக்க காதை' வரையான 26 காதைகளுக்கு இவர் உரை எழுதினார்.



எஞ்சிய நான்கு காதைகளுக்கு உரை எழுத இவரின் நலிவுற்ற உடல்நிலை காரணமாக முடியாமல் போனது. இந்நான்கு காதைகளுக்கும் உரை எழுதியவர் உரை வேந்தர் ஔவை சு.துரைசாமி அவர்கள்.

இவ்விரு காப்பியங்களுக்கும் ந.மு.வேங்கடசாமி அவர்கள் உரை எழுதத் தூண்டுகோலாக இருந்தவர் பாகனேரி மு.காசி விசுவநாதன்.

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநானூறு உள்பட தண்டியலங்காரம், யாப்பருங்கலக் காரிகை, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது ஆகியவைகளுக்கும் உரை எழுதியிருக்கிறார்.

'சேரன் செங்குட்டுவன்' என்ற சிறப்பான நூலை எழுதியவர் மூ.இராகவய்யங்கார். இவரின் இன்னொரு நூல் 'வேளிர் வரலாறு'

இந்நூலைப் படித்த வேங்கடசாமி அவர்கள் அதிலுள்ள வரலாற்றுப் பிழைகளைச் சுட்டிக்காட்டித் தானும் ஒரு 'வேளிர் வரலாறு' நூலை எழுதினார். இந்நூலைத் தமிழுலகம் ஏற்றுக்கொண்டது.

வேளிர் வரலாறு – சோழர் வரலாறு – கள்ளர் சரித்திரம் – நக்கீரர் – கபிலர் – கண்ணகி வரலாறும், கற்பும் மாண்பும் – கட்டுரைத் திரட்டு போன்ற நூல்கள் எழுதியிருக்கிறார்.

இவற்றுள் 'நக்கீரர்' என்ற நூல் இலண்டன் பல்கலைக் கழகத்திலும், காசி இந்துப் பல்கலைக் கழகத்திலும் பாடமாக வைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கள்ளர் சரித்திரம் ஒரு சமூகம் சார்ந்த நூலாக இருந்தாலும், அது தமிழக மக்களின் வரலாறாக இருக்கிறது.

கலைஞர் அவர்கள் தான் எழுதிய 'தென் பாண்டிச் சிங்கம்' என்ற வரலாற்றுக் கதையின் முன்னுரையில், "தமிழ் கூறும் நல்லுலகத்தாரால் நாட்டார் ஐயா என்று அன்புடன் அழைக்கப் பெற்ற திரு ந.மு.வே.நாட்டார் அவர்களின் 'கள்ளர் சரித்திரத்தின்' துணை கொண்டு இந்நூலை எழுதத் தொடங்குகிறேன்" என்று குறிப்பிட்டு இருப்பது கருதத்தக்கது.

பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்களின் தந்தை சரவண முதலியார் அவர்களும், ந.மு.வேங்கடசாமி அவர்களும் நெருங்கிய நண்பர்கள்.

இவர்கள் இருவரும் இணைந்து 'திருவிளையாடல் புராண'த்திற்கு உரை எழுதியிருக்கிறார்கள். ந.மு.வேங்கடசாமி சிறந்த சைவநெறியாளர். சென்னை மயிலாப்பூர் சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் தலைவராக ஓராண்டு பொறுப்பு வகித்து இருக்கிறார்.

தமிழுக்கு வேற்று மொழிச் சொற்கள் தேவையில்லை. தமிழ் தனித்து இயங்கும். ஒருவேளை வேற்று மொழிச் சொற்கள் தேவைபட்டால் என்ன செய்வது?

தமிழில் உள்ள வேர் சொற்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்க வேண்டும். புதிய சொற்களை உருவாக்க அல்லது கண்டுபிடிக்கத் தாமதமானால், வேற்று மொழிச் சொற்களைத் தமிழின் ஒலி இயல் இயல்புக்கு ஏற்பத் திரித்து வழங்க வேண்டும். எடுத்துக்காட்டு: ஜீசஸ் – இயேசு, ஜேக்கப் – யாகோபு என்று விளக்கம் தருகிறார் ந.மு.வேங்கடசாமி அவர்கள்.

சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் 24.12.1940 ஆம் ஆண்டு இவருக்கு 'நாவலர்' என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் ந.மு.வேங்கடசாமி அவர்கள் வீட்டிற்குச் சென்று சிலப்பதிகாரம், தொல்காப்பியம் ஆகிய நூல்களின் சில ஐயங்களுக்குப் பாடம் கேட்டுச் சென்றுள்ளார் என்று ஒரு தகவல் இருக்கிறது.

தஞ்சையிலோ அல்லது திருச்சியிலோ ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைத்து விட வேண்டும் என்று 1922 காலகட்டங்களில் கடும் முயற்சி எடுத்தார். இருந்தும் முயற்சி பலன் தரவில்லை, தோல்வியாகவே முடிந்தது.

1980ஆம் ஆண்டு தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தோன்றியபொழுது அதைப்பார்க்க ந.மு.வேங்கடசாமி அவர்கள் உயிருடன் இல்லை.


ஆம்! 1944ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28ஆம் நாள், நாவலர் ந.மு.வேங்கடசாமி அவர்களின் பெரும் புலமையின் மீது காதல் கொண்ட மரணம், அவரை ஆரத்தழுவி அழைத்துக்கொண்டு போய்விட்டது. ●

Karunchattai Tamilar. Date of Publication 12th and 28th of Every Month.
Registered with Registrar of News paper for India No: TN TAM/2009/32719, Post Regd No: TN/CH(C)/427/2016-18,
Licenced to post WPP No: TN/PMG(CCR)WPP - 206/2016-18



# 7

## கூகுள் டிரான்ஸ்லேட் Google Translate







சிவதி

வட இந்திய உணவு விடுதி ஒன்றில் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். என்னுடைய நண்பர் சரியான ஊறுகாய்ப் பிரியர். தமிழும் ஆங்கிலமுமாகக் கலந்து விடுதிப் பணியாளரிடம் ஊறுகாய் கேட்டார். Pickle, Pickle என அடுக்குத்தொடராகச் சொல்லி, சொல்லி விக்கல் வந்ததே தவிர Pickle வந்த பாடில்லை.

ஊறுகாய்க்கு இந்தியில் என்ன? அதை எப்படிக் கேட்டுப் பெறுவது என செய்வதறியாது அமைதியாகிவிட்டார்.

அடுத்த கணமே என்னுடைய குரல் “ ஹே பையா, ஆச்சார் லா வோ..” என ஒலித்தது. உடனே.. ஊறுகாயும் மேசைக்கு வந்தது. என் நண்பனுக்கு வியப்பும் வந்தது?

எனக்கு எப்படி இந்தி தெரிந்தது? இப்படித்தான் தெரிந்தது...

ஆம், சுற்றுப்பயணங்களில் எப்போதும் என்னுடனே வைத்திருக்கும் செயலி Google Translate.

முதலில் Play Store சென்று Google Translate Download செய்து கொள்ளுங்கள். உலகில் பேசப்படும் முதன்மையான 103 மொழிகளை மொழிபெயர்ப்பு செய்யும் அற்புதமான செயலி இது.

உதாரணமாக இந்தி பேசுவரிடம் “ உன் பெயரென்ன? “ என்று கேட்க விரும்புகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம்.

அதனை தமிழில் தட்டச்சு செய்யுங்கள்.. இப்போது கீழே உள்ளே கட்டத்தில் Hindi எனத் தேர்வு செய்யுங்கள். ”துமாரா நாம் கியா ஹே?” –அடுத்த நொடிப்பொழுதே வந்துவிடும் அவ்வளவுதான். இதனைக்கொண்டு உங்கள் கருத்துகளை உடனடியாகப் பிறரிடம் பகிர்ந்து கொள்ள முடியும்.

எந்த மொழியைத் தேர்வு செய்கிறீர்களோ அந்த மொழியில் சொற்கள் ஆங்கிலத்தில் வந்துவிடும். கூடவே ஒரு ஒலிக்கோப்பும் (Audio File) இருக்கும். அதைத் தொட்டால் அந்த சொற்பதங்களை வாசித்துக் காண்பிக்கும். அந்த உச்சரிப்பைக் கொண்டே நீங்கள் பேசலாம்.

தமிழில் இருந்து பிற மொழிக்கும், பிற மொழியிலிருந்து தமிழுக்குமாக 103 மொழிகள் உடனடியாக மொழிபெயர்த்துத் தருகிறது. 52 மொழிகள் இணைய இணைப்பு இல்லாமலே இந்த செயலியைப் பயன்படுத்த முடியும்.

இப்போது இந்த செயலி இன்னும் மேம்பட்டுள்ளது. இந்த செயலியை ஆன் செய்துகொண்டு கேமராவைத் திறந்து கொள்ளுங்கள். பிற மொழி சொற்களைப் படம் பிடிப்பது போல் நீட்டுங்கள். பார்க்கும் போதே அந்த சொற்கள் தேவையான மொழிக்கு மாறியிருப்பதைக் காணலாம். இந்த வசதி இந்தி உள்ளிட்ட 53 மொழிகளுக்கு வந்துள்ளது. இன்னும் குறுகிய காலத்தில் தமிழுக்கும் வந்துவிடும்.

தாய்மொழிதான் தெரியும்; பிற மொழி தெரியாதே என வருத்தப்படுபவர் உண்டு. இனி உங்களுக்கு இந்தக் கவலை வேண்டாம். உங்கள் அச்சத்தை தொழில் நுட்பம் உடைத்தெறிகிறது. மொழி பெயர்ப்பில் எழுவாய், பயனிலை என்ற சிறு சிறு மாற்றங்கள் செய்தால் இன்னும் நேர்த்தியாக இருக்கும். தமிழ் உள்ளீடு கற்றுக்கொண்டு திருத்தங்களை நாமே கூட செய்யலாம். அவ்வாறு செய்தால் செம்மையான தமிழ் மொழி பெயர்ப்பு கிடைப்பது உறுதி. இதன் வழியாக பிறமொழி இலக்கியங்களை நம் மொழிக்கும், நமது படைப்புகளைப் பிற மொழிகளுக்கும் மொழிபெயர்ப்புச் செய்யும் காலமும் கனிந்து வருகிறது.

உலக மொழிகள் நம் உள்ளங்கைகளில் வந்துவிட்டன. யாதும் ஊரே யாவரும் கேளிர்! கணியன் கனவினை அறிவியல் சாத்தியமாக்கி வருகிறது. இந்த செயலியை நிறுவ கீழ்கண்டுள்ள இணைப்பை சொடுக்கவும்

https://play.google.com/store/apps/details?id=com.google.android.apps.translate ●

Tamil Fortnightly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP
Posted: 1 February 2017

பெறுநர்/To

திரு ..................................................
..................................................
..................................................
..................................................

அனுப்புனர்/From
கருஞ்சட்டைத் தமிழர்
122/130, என்.டி.ஆர். தெரு,
ரங்கராசபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
பேச : 044 - 42047162

Karunchattai Tamilar
122/130, N.T.R. St.,
Rengarajapuram, Kodambakkam,
Chennai - 600 024.

Owned and published by G. Dinakaran, From 7/8, Peters Colony, Rayapettah, Chennai - 14, and Printed by R.B. Anandababu at Cosmic Printers,
12 Oil Monger Street, Triplicane, Chennai -5. Editor : Suba. Veerapandian